

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.10.2025) தலைமைச் செயலகத்தில், Foxconn நிறுவனத்தின் இந்தியாவிற்கான தலைவர் ராபர்ட் வூ அவர்கள் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், Foxconn நிறுவனத்தின் இயக்குநர் செந்தில் குமார், நிர்வாக இயக்குநர் டேவிட் சென், இயக்குநர் தினகர் மல்லாடி, நிருவாகிகள் திருமதி ஹன்னா வாங், சுஜாய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு – மீட்புப் பணிகள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, தீயணைப்பு துறை வாகனத்தின் செயல்பாட்டினை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.

### அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தில்

# புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், அக். 15 - அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் மாவட்டம், ஆண்டிடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். தீயணைப்பு துறை வாகனத்தின் செயல்பாட்டினை கொடியசைத்து துவக்கி வைத்தார். ஆண்டிமடம் தீயணைப்பு (ம) மீட்புப்பணிகள் நிலையத்தினை திறந்து வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. இப்பகுதியில் அதிகளவில் தீ விபத்து ஏற்படுகின்ற சூழல் இருந்தது அதை தடுப்பதற்கும், அதற்கான தீர்வுகளுக்கு கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டிருந்தது. அரியலூர் மாவட்டம் அதிகமான குடிசைப்பகுதிகள் உள்ள மாவட்டமாகும். இதனை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள திருமானூர் மற்றும் ஆண்டிமடம் பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனி அறிவிப்பாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தினை வழங்கியிருக்கிறார்கள். குன்னத்தில் பணிமனை துவங்குகின்ற வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். மேலும் ஜெயங்கொண்டத்தில் புதிய மின்வாரிய கோட்ட அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. வரும் மாதத்தில் குன்னத்திலும் திறக்கப்படவுள்ளது. செந்துறையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதேபோன்று அரியலூர் மாவட்டத்தில் பிலாக்குறிச்சி, சிலால், தண்டலை மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் கொளக்காநத்தம் ஆகிய நான்கு இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க இன்றைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து ஜெயங்கொண்டம் சிப்காட் தொழிற்பேட்டை புதிய காலணி தொழிற்சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்கள். அது சுற்றுச்சூழல் அனுமதிக்காக உள்ளது. அனுமதி கிடைத்தவுடன் பணிகள் துவங்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் தான் விருத்தாசலம் ஜெயங்கொண்டம் சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. 2006 - 2011 ஆம் ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது நான் சட்டமன்றத்தில் இந்த பாலத்தின் அவசியம் குறித்து பேசினேன். தலைவர் கலைஞர் அவர்கள் மதனத்தூர் நீலத்தநல்லூர் அமைக்க உத்தரவிட்டார்கள்.

இந்த பாலம் தஞ்சை மாவட்டத்தையும் அரியலூர் மாவட்டத்தினையும் இணைக்கும் வகையில் இருக்கிறது இன்று அச்சாலைகள் அகலப்படுத்தப்பட்டதால் அப்பகுதி வணிக சாலையாகவே மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 8000 ஏக்கர் நிலப்பரப்பு திரும்ப வழங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத சாதனையாகும். இத்திட்டத்திற்காக பெறப்பட்ட நிலத்திற்கு வழங்கபட்ட தொகையினை அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டாம் எனவும் தெரிவித்து, நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு நிலத்தினை திரும்ப வழங்கும் வண்ணம் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியின் வளர்ச்சியினை முன்னேற்றும் வகையில் நம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்த்து, பார்த்து திட்டங்களை தந்துகொண்டு இருக்கிறார். இன்று இரண்டு தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது இதுதான் மக்களுக்கான திராவிட மாடல் அரசு

என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். ஆ.ரா.சிவராமன், துணை இயக்குநர் மத்திய மண்டலம் திருச்சி முரளி, மாவட்ட அலுலவர் பெரம்பலூர் அரியலூர் ஒருங்கிணைந்த மாவட்டம் அனுசுயா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி மாவட்ட அலுவலர் பெரம்பலூர் வீரபாகு, நிலைய அலுவலர் செந்தில்குமார், தீயணைப்பு துறை அலுவலர்கள், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் மங்கைநல்லூரில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் சிறப்பு முகாமில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும்,பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். பொது மக்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு கண்டு பயனாளிகளிடம் வழங்கினார். உடன் மங்கை எம். சங்கர், ஏ.ஆர்.ராஜா மற்றும் பலர் உள்ளனர்



தருமபுரி கிழக்கு மாவட்டம், ஒட்டப்பட்டி நியாய விலைக்கடையில் கூட்டுறவுத் துறையின் சார்பில் பண்டிகையை முன்னிட்டு முதியோர் ஓய்வூதிய திட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. ஆகியோர் இலவச வேட்டி மற்றும் சேலையினை வழங்கி நிகழ்வினை துவக்கி வைத்தனர். உடன் கவிதா, சரவணன், காயத்ரி, விஷ்ணுபிரியா, ஏ.எஸ்.சண்முகம் மற்றும் முதியோர் ஓய்வூதிய திட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை நகரக் கழக முன்னாள் செயலாளர் ஆர்.ஏ.வீராசாமி ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருஉருவப் படத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர், என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மு.லோகநாதன், இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணத்தில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தன்னுடைய அலுவலகத்தில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நடராஜன், சு.க.முத்துசெல்வம், ஆர்.அசோக்குமார், எஸ்.இரவிச்சந்திரன், க.செந்தில்குமார், மாடாகுடி செல்வராஜ், கே.கே.எஸ்.ராஜா, லெட்சுமணன், எல்.ஆர்.கௌதம், மாரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக் கூட்டு மையங்கள் அமைத்திட

# ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தகவல்!

சென்னை, அக்.15- வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைத்திட விண்ணப்பங்கள் வரவேற்பு; மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைத்திட அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும் என்று வேளாண்மை உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

உழவர்களின் நலனைக் காத்து வேளாண் உற்பத்தியினை உயர்த்துவதோடு, விளைபொருள் வீணாகாமல் தடுத்து அவற்றை மதிப்புக்கூட்டி அதிக வருவாய் பெற்றிடவேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், வேளாண் பொருட்களின் மதிப்புக்கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்த ஒரு சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, 10 கோடி ரூபாய் வரையிலான புதிய மதிப்புக்கூட்டுதல் திட்டங்களுக்கு முதலீட்டு மானியமாக 25 சதவீதமும், பெண்கள், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு (சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அட்டவணைப்படி), ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கூடுதலாக 10 சதவீதம் ஆக மொத்தம் 35 சதவீதம் என்ற வகையில் அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இது தவிர அனைத்துப் பிரிவினருக்கும் 5 சதவீத வட்டி மானியம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

இதற்கான, அரசாணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதிக அளவில் விண்ணப்பங்களைப் பெற, திட்டம் குறித்த விழிப்புணர்வினைப் பெருமளவு எற்படுத்துமாறு அனைத்து மாவட்ட வேளாண் விற்பனைத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் தொழில்கள் வேளாண்/தோட்டக்கலை விளைபொருட்களின் இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை பதப்படுத்தும் திட்டங்களாக இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில் வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களில் குறிப்பாக விரைவில் அழுகக்கூடிய விளைபொருட்களில் (காய்கறிகள், பழங்கள், பூக்கள் போன்றவற்றில்) ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள மதிப்புக் கூட்டிய பொருட்களைத் தயாரிக்க ஏதுவான நவீன மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைக்க ஆர்வமுடைய தொழில் முனைவோர்களை மாவட்டங்கள் தோறும் தேர்வு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.



**வங்கிக் கடன்: திட்ட அறிக்கை!**

திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு குறைந்தபட்சம் 5% ஆக இருக்க வேண்டும் மற்றும் மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகப் பெறப்பட வேண்டும் என்பதால், இவர்கள் வங்கிக்கடன் பெறத் தேவையான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்க மாவட்ட அளவில் உள்ள ஆலோசகர்கள் உதவுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் வங்கிகளில் கடன் உதவி பெறுவதற்கான வழிமுறைகளை வழங்கவேண்டும் என்றும் வேளாண்மை விற்பனைத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,

மேலும், இத்திட்டத்தின் பலன் தொழில் தொடங்க விருப்பம் உள்ள அனைவரையும் சென்றடையும் வகையில், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையிலான விவசாயி கள் நலன் காக்கும் நாள் கூட்டங்கள், வங்கிகள் குழுக் கூட்டம் ஆகியவற்றிலும் எடுத்துரைக்க அறிவுரை வழங்கப்பட்டது. முதன்மை வங்கிகளின் கிளை மேலாளர்களை நேரடியாக அணுகி, இத்திட்டம் குறித்து எடுத்துரைக்கக் கூறப்பட்டுள்ளது.

**தரமான உற்பத்திப் பொருட்கள்!**

வங்கியில் கடன் ஒப்புதல் பெறப்பட்டபின், மானியம் பெறுவதற்கான அவர்களுடைய விண்ணப்பங்கள் மாவட்ட தொழில் நுட்பக்குழு மற்றும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவால் உடனடியாக மதிப்பாய்வு செய்யப்பட்டு தகுந்த விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, வேளாண், தோட்டக்கலை விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல் போன்ற தொழில்களை மேற்கொண்டு தரமான உற்பத்திப்பொருட்களை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்து பொருளாதார ஏற்றம்பெற ஆர்வமுள்ள அனைத்து தொழில் முனைவோர்களும் 100 மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைத்திட அரசின் மானிய உதவியுடன் செயல்படுத்த உள்ள இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.



திருவாரூரில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்கான ஆணைகளை மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், வாரை.எஸ்.பிரகாஷ், புவனப்ரியா, அகிலா சந்திர சேகர், இரா.சங்கர், ரஜினி சின்னா அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.



ஓசூர் சட்டமன்றத் தொகுதி ஓசூர் மாநகராட்சி வார்டு 14 பகுதிச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் வெங்கடேஷ் ஏற்பாட்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 10 இலட்சம் மதிப்பில் தார்ச்சாலை அமைப்பதற்கு பணிகளை மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மேயர் சத்யா , துணை மேயர் ஆனந்தய்யா , ஒன்றியக் கழகச் செயலாளர் ராமமூர்த்தி மற்றும் பலர் உள்ளனர்.